தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை:– திரு. A. ராபின்சன் ஜார்ஜ்,** B.Sc., L.L.M., M.L.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.194/2024**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் விபரம் | மாநில அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>முன்னீர்பள்ளம் காவல் நிலையம்<br>குற்ற எண்.319/2019 |
| குற்றம் சாட்டப்பட்டவர் :- | லிவிங்ஸ்டன், வயது 27/19<br>த/பெ.ஆனந்தராஜ்,<br>L–142 TNHB Colony, Stage–3, கே.டி.சி நகர்,<br>திருநெல்வேலி. |
| அரசு தரப்பில் எதிரி மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii)–ன் படியும் குற்றச்சாட்டு. |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii) |
| எதிரியின் பதிலுரை | குற்றவாளி இல்லை. |
| நீதிமன்றத்தின் தீர்மானம்:– | முடிவாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii)–ன் படி வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து மேற்படி சட்டப்பிரிவுகளின் படி எதிரியை குற்றவாளி இல்லையென தீர்மானித்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் பி.ஆர்.23/2024 ல் தாக்கல் செய்யப்பட்டு சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 11 X 9437 Toyata Innova car முன்னீர்பள்ளம் காவல்நிலைய பொறுப்பில் உள்ளதால் அதன் உரிமையாளர் தனது உரிமையை நிலைநாட்டி மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் மனு செய்து பெற்றுக்கொள்ளுமாறும், சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று பயனற்றது என்பதால் அதனை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

| Sl. No. | Name of the Police station and the Crime Number of the offence | Accused Name | Father's Name | Occupation | Residence | Age |
|---|---|---|---|---|---|---|
| A1 | முன்னீர்பள்ளம் காவல் நிலையம் குற்ற எண்.319/2019 | லிவிங்ஸ்டன், | ஆனந்தராஜ் | இந்து | L-142 TNHB Colony, Stage-3, கே.டி.சி நகர், திருநெல்வேலி. | 27/19 |

| சம்பவம் நடந்த நாள் | புகார் கொடுத்த நாள் | கைது செய்த நாள் | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | மேல் விசாரணை | மேல் விசாரணை நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | தீர்ப்புரை /நகல்/ எதிரிக்கு நகல் | காலதாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25.09.2019 | 25.09.2019 | 26.09.2018 | 12.12.2019 | 07.08.2024 | 07.08.2024 | 27.08.2024 | -- | -- | -- |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் 27.08.2024ம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்த போது, அரசுத் தரப்பில் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் (பொறுப்பு) திரு.S.அருண்பாண்டியன், M.A., B.L.., அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.பாலகணேசன், B.A., B.L., அவர்களும் முன்னிலையாகி இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

25.09.2019ம் தேதி 09.30 மணியளவில் சாட்சி-1 பெருமாள்துரையும், அவரது தம்பியான சாட்சி-2 அருள்ராஜ், சாட்சி-3 முத்துபாலா ஆகிய மூவரும் மேலச்செவல் கல்மடம் வடக்கு பஸ்ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த போது அம்பாசமுத்திரம் - திருநெல்வேலி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக TN 11 X 9437 சிமெண்ட் கலர் இன்னோவா காரை எதிரி ஓட்டி வந்து சாட்சி-1ன் மீது காரை மோதுவது போல் வந்து நிறுத்தியதை சாட்சி-1 எதிரியிடம் பார்த்து ஒழுங்கா வண்டி ஓட்ட தெரியாதா எனக் கூறியவரை காரில் இருந்த இறங்கிய எதிரி சாட்சி-1ஐப் பார்த்து தேவடியா மவன, புண்டமவனே நான் யாருனு தெரியுமால நான் தாழையூத்துல ஒருத்தன வெட்டி கொன்னவம்ல என்னையால வண்டிய பார்த்து ஓட்ட சொல்லுத கூதிமவனே என்று அசிங்கமாக பேசவும், மீண்டும் சாட்சி-1 எதிரியிடம் வண்டிய என் மேல ஏத்த வந்த மாதிரி நிறுத்துனதனால தான் கேட்டேன். அதுக்கு இப்படி அசிங்கமாக பேசுறீங்கலே என கேட்டதற்கு எதிரி மீண்டும் சாட்சி-1ஐப் பார்த்து தேவடியாமவனே நீ திரும்புவம்

என்னை எதிர்த்தா பேசுற என்று அசிங்கமாகப் பேசியும் காரில் இருந்த அருவாளை எடுத்து நீ உயிரோடு இருந்தாதானல எதிர்த்து பேசுவ என்று சாட்சி–1ன் கழுத்தை நோக்கி இத்தோடு செத்து தொலை என்று ஓங்கி அருவாளால் வெட்டவும் சாட்சி–1 சுதாரித்து விலகியுள்ளார். விலாகாமல் இருந்திருந்தால் அந்த வெட்டானது அவர் கழுத்தில் பட்டு கழுத்து துண்டாகி உயிர் போயிருக்கும். மீண்டும் எதிரி சாட்சி–1ஐ துரத்தி அருவாள் பிடங்கால் அடித்ததில் வீக்க காயம் ஏற்படுத்தியும் சாட்சிகள் 2,3 ஆகிய இருவரும் சத்தம் போடவும் எதிரி கையில் வைத்திருந்த அருவாளை அவனுடைய தலைக்கு மேலே சுழற்றி சாட்சி–1ஐப் பார்த்து இன்னிக்கி தப்பிச்சுட்ட என்னைக்கானாலும் உன் சாவு என் கையால் தான் என்று அருவாளைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii)–ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக முன்னீர்பள்ளம் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) திருநெல்வேலி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5 அரசு தரப்பு குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.194/2022 என வழக்கை கோப்பிற்கு எடுத்துள்ளது. எதிரி அழைப்பாணையின் பேரில் நீதித்துறை நடுவர் எண்.5 திருநெல்வேலி நீதிமன்றத்தில் ஆஜரான போது எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாக கொள்ளப்பட்டதும் குவிமுச பிரிவு 207ன் கீழ் சொல்லப்பட்டதுமான அனைத்து ஆவணங்களின் நகல்களும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) பிரிவு 307–ன் படியான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால், நீதித்துறை நடுவர் எண்.5 இவ்வழக்கை மேல் விசாரணைக்காக குவிமுச பிரிவு 209ன் படி விசாரணைக்கு அனுப்பும் ஆணை பிறப்பித்து திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார். திருநெல்வேலி, முதன்மை அமர்வு நீதிமன்றம் வழக்கை விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது.

4) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் குற்றச்சாட்டு வனைவது குறித்து இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டு எதிரி மீது குற்றச்சாட்டு வனைய உரிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),

307, 506(ii) ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்து விளக்கி கூறி வினவிய போது, எதிரி குற்றச்சாட்டினை மறுத்தார். எனவே வழக்கு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்களும். சா.பொ.1, சா.பொ.2 வரையிலான சான்றுப்பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியச் சுருக்கம் பின்வருமாறு

அ.சா.1 பெருமாள்துரை தனது சாட்சியத்தில், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த வருடம் முன்னீர்பள்ளம் காவல்நிலையத்திற்கு வேறு ஒரு வழக்கு விசயமாக சென்றிருந்ததாகவும், அப்போது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு கையொப்பம் போட்டுக் கொடுத்ததாகவும், புகார்மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.5 முன்னீர்பள்ளம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் சுரேஷ் தனது சாட்சியத்தில், முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் 25.09.2019 தேதியில் பணி புரிந்த உதவி ஆய்வாளர் வேல்முருகன், ஆய்வாளர் சீதாலட்சுமி ஆகியோருடைய கையொப்பங்கள் தனக்கு தெரியும் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 25.09.2019 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு உதவி ஆய்வாளர் வேல்முருகன் நிலைய பொறுப்பில் இருந்த போது கோபாலசமுத்திரத்தை சேர்ந்த பெருமாள்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவைப் பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.319/2019, சட்டப் பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பெருமாள்துரை கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் சீதாலெட்சுமி 25.09.2019 ஆம் தேதி 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தின் சாட்சிகள் ஐயப்பன், சங்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5

என்றும், பின்பு சாட்சிகள் பெருமாள்துரை, அருள்ராஜ், முத்து பாலா, ஐயப்பன், சங்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு வழக்கின் எதிரி லிவிங்ஸ்டன் என்பவரை 25.09.2019 ஆம் தேதி பகல் 3.00 மணிக்கு அரோமா நகர், சர்ச்க்கு பின்புறம் வைத்து கைது செய்து, சாட்சிகள் இசக்கி, அந்தோணி ஆகியோர் முன்னிலையில் விசாரித்த போது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, சாட்சிகளின் கையொப்பங்களை பெற்றுள்ளார் என்றும், பின்பு எதிரி ஆஜர் படுத்திய TN 11 X 9437 என்ற இன்னோவா கார் மற்றும் அருவாள் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 என்றும், பின்னர் சாட்சிகள் அந்தோணி, இசக்கி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை காவல் நிலையம் கொண்டு வந்துள்ளார் என்றும், எதிரி லிவிங்ஸ்டன் என்பவரை தக்கவழிக் காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த படிவம் 91 அ.சா.ஆ.7 என்றும், TN 11 X 9437 என்ற இன்னோவா கார் சா.பொ.1 என்றும், அருவாள் ஒன்று சா.பொ.2 என்றும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வேலவன் என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார் என்றும், அந்த காயச் சான்றிதழ் அ.சா.ஆ.8 என்றும், பின்பு சாட்சிகள் பாலமுருகன், முத்து, கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப் பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

8) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி வினவப்பட்டபோது சாட்சியங்களை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா என்று வினவிய போது எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

9) <u>தீர்விற்குரிய பிரச்சனை</u>

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது வனையப்பட்டுள்ள

இதச பிரிவு 294(b), 307, 506(ii)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

10) **தீர்வு**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அ.சா.5 ஆன காவல் ஆய்வாளர் சுரேஷ் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார். எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

11) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டன. இவ்வழக்கில் கடந்த 25.09.2019ம் தேதி 09.30 மணியளவில் சாட்சி–1 பெருமாள்துரையும், அவரது தம்பியான சாட்சி–2 அருள்ராஜ், சாட்சி–3 முத்துபாலா ஆகிய மூவரும் மேலச்செவல் கல்மடம் வடக்கு பஸ்ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த போது அம்பாசமுத்திரம் – திருநெல்வேலி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக TN 11 X 9437 சிமெண்ட் கலர் இன்னோவா காரை எதிரி ஓட்டி வந்து சாட்சி–1ன் மீது காரை மோதுவது போல் வந்து நிறுத்தியதை சாட்சி–1 எதிரியிடம் பார்த்து ஒழுங்கா வண்டி ஓட்ட தெரியாதா எனக் கூறியவரை காரில் இருந்த இறங்கிய எதிரி சாட்சி–1ஐப் பார்த்து தேவடியா மவன, புண்டமவனே நான் யாருனு தெரியுமால நான் தாழையூத்துல ஒருத்தன வெட்டி கொன்னவம்ல என்னையால வண்டிய பார்த்து ஓட்ட சொல்லுத கூதிமவனே என்று அசிங்கமாக பேசவும், மீண்டும் சாட்சி–1 எதிரியிடம் வண்டிய என் மேல ஏத்த வந்த மாதிரி நிறுத்துனதனால தான் கேட்டேன். அதுக்கு இப்படி அசிங்கமாக பேசுறீங்கலே என கேட்டதற்கு எதிரி மீண்டும் சாட்சி–1ஐப் பார்த்து தேவடியாமவனே நீ திரும்புவம் என்னை எதிர்த்தா பேசுற என்று அசிங்கமாகப் பேசியதாக எதிரி மீது இதச பிரிவு 294(b)–ன் படி குற்றசாட்டு வனையப்பட்டுள்ளது.

12) எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 294(b)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரீசிலனை செய்து பார்க்கும் போது அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள இந்த வழக்கின் புகார்தாரர் பெருமாள்துரை என்பவர் அவருடைய சாட்சியத்தில் இந்த வழக்கின் எதிரி தன்னை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவோ அதனால் தனக்கு அவமானம் மற்றும் அறுவறுப்பு ஏற்பட்டதாகவோ எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அருள்ராஜ் மற்றும் அ.சா.3 முத்துபாலா ஆகியோர்களும் அவர்களுடைய சாட்சியத்தில் எதிரி அ.சா.1 ஐ அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. இவற்றை பரீசிலனை செய்து பார்க்கும் போது எதிரி அ.சா.1 ஆன பெருமாள்துரை என்பவரை அசிங்கமான வார்த்தைகளில் பேசி அவமானப்படுத்தியதாக எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 294(b)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) மேலும் மேற்படி தேதி மேற்படி இடம் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக காரில் இருந்த அருவாளை எடுத்து நீ உயிரோடு இருந்தாதானல எதிர்த்து பேசுவ என்று சாட்சி–1ன் கழுத்தை நோக்கி இத்தோடு செத்து தொலை என்று ஓங்கி அருவாளால் வெட்டவும் சாட்சி–1 சுதாரித்து விலகியுள்ளார். விலாகாமல் இருந்திருந்தால் அந்த வெட்டானது அவர் கழுத்தில் பட்டு கழுத்து துண்டாகி உயிர் போயிருக்கும். எனவே சாட்சி–1 ஐ கொலை முயற்சி செய்த குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 307–ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 307–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரீசிலனை செய்து பார்க்கும் போது இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 பெருமாள்துரை என்பவர் அவருடைய சாட்சியத்தில் எதிரி தன்னை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அருவாளால் வெட்டி கொலை செய்ய முயற்சி செய்ததாக எதிரியை அடையாளம் காண்பித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மாறாக தன்னிடம்

காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த வருடம் முன்னீர்பள்ளம் காவல்நிலையத்திற்கு வேறு ஒரு வழக்கு விசயமாக சென்றிருந்ததாகவும், அப்போது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு கையொப்பம் போட்டுக் கொடுத்ததாகவும், புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று தனக்குத் தெரியாது என்றும், புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அருள்ராஜ், அ.சா.3 முத்துபாலா ஆகியோர்களும் அவர்களுடைய சாட்சியத்தில் வழக்கின் எதிரி அ.சா.1 பெருமாள்துரை என்பவரை அருவாளால் வெட்டி கொலை செய்ய முயற்சித்ததார் என்று எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

14) இந்த நிலையில் அ.சா.5 ஆக சாட்சியம் அளித்துள்ள காவல் ஆய்வாளர் சுரேஷ் என்பவர் அவருடைய சாட்சியத்தில் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் 25.09.2019 தேதியில் பணி புரிந்த உதவி ஆய்வாளர் வேல்முருகன், ஆய்வாளர் சீதாலட்சுமி ஆகியோருடைய கையொப்பங்கள் தனக்கு தெரியும் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 25.09.2019 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு உதவி ஆய்வாளர் வேல்முருகன் நிலைய பொறுப்பில் இருந்த போது கோபாலசமுத்திரத்தை சேர்ந்த பெருமாள்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவைப் பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.319/2019, சட்டப் பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பெருமாள்துரை கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் சீதாலெட்சுமி 25.09.2019 ஆம் தேதி 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தின் சாட்சிகள் ஐயப்பன், சங்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், பின்பு சாட்சிகள் பெருமாள்துரை, அருள்ராஜ், முத்து பாலா, ஐயப்பன், சங்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு வழக்கின் எதிரி

லிவிங்ஸ்டன் என்பவரை 25.09.2019 ஆம் தேதி பகல் 3.00 மணிக்கு அரோமா நகர், சர்ச்க்கு பின்புறம் வைத்து கைது செய்து, சாட்சிகள் இசக்கி, அந்தோணி ஆகியோர் முன்னிலையில் விசாரித்த போது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, சாட்சிகளின் கையொப்பங்களை பெற்றுள்ளார் என்றும், பின்பு எதிரி ஆஜர் படுத்திய TN 11 X 9437 என்ற இன்னோவா கார் மற்றும் அருவாள் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார் என்றும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 என்றும், பின்னர் சாட்சிகள் அந்தோணி, இசக்கி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை காவல் நிலையம் கொண்டு வந்துள்ளார் என்றும், எதிரி லிவிங்ஸ்டன் என்பவரை தக்கவழிக் காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த படிவம் 91 அ.சா.ஆ.7 என்றும், TN 11 X 9437 என்ற இன்னோவா கார் சா.பொ.1 என்றும், அருவாள் ஒன்று சா.பொ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ள போதிலும் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த போது உடனிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிக் கையொப்பம் செய்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 அந்தோணி எதிரி தன் முன்னிலையில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கின் சாட்சிப் பொருள்களான TN 11 X 9437 என்ற இன்னோவா கார் மற்றும் அருவாள் ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மாறாக எதிரி லிவிங்ஸ்டன் என்பவரை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளார். இவைகளை பரீசிலனை செய்து பார்த்த போது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் சான்றுப்பொருள்களான TN 11 X 9437 என்ற இன்னோவா கார் மற்றும் அருவாள் கைப்பற்றப்பட்டதாக புலன்விசாரணை அதிகாரியான அ.சா.5

அளித்துள்ள சாட்சியம் தனிநபர் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பெருமாள்துரை என்பவர் அவருடைய சாட்சியத்தில் எதிரி தன்னை அருவாளால் வெட்டி கொலை செய்ய முயற்சித்ததாக எந்தவித சாட்சியமும் அளிக்காத நிலையில் எதிரி அ.சா.1 பெருமாள்துரை என்பவரை அருவாளால் தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாக எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 307 பிரிவின் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) மேலும் மேற்படி தேதி மேற்படி இடம் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சாட்சி–1ஐ துரத்தி அருவாள் பிடங்கால் அடித்ததில் வீக்க காயம் ஏற்படுத்தியும் சாட்சிகள் 2,3 ஆகிய இருவரும் சத்தம் போடவும் எதிரி கையில் வைத்திருந்த அருவாளை அவனுடைய தலைக்கு மேலே சுழற்றி சாட்சி–1ஐப் பார்த்து இன்னிக்கி தப்பிச்சுட்ட என்னைக்கானாலும் உன் சாவு என் கையால் தான் என்று அருவாளைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இதச பிரிவு 506(ii) –ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 506(ii)–ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரீசிலனை செய்து பார்க்கும் போது அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அதில் தனக்கு உயிர் பயம் ஏற்பட்டதாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அருள்ராஜ், அ.சா.3 முத்துபாலா ஆகியோர்கள் அவர்களுடைய சாட்சியத்தில் எதிரி அ.சா.1 ஆன புகார்தாரரை கொலை செய்து விடுவதாக குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தார் என்று எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. இவற்றை பரீசிலனை செய்து பார்க்கும் போது எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவு 506(ii) ன் படியான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16) முடிவாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii)–ன் படி வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து மேற்படி சட்டப்பிரிவுகளின் படி எதிரியை குற்றவாளி இல்லையென தீர்மானித்து குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் பி.ஆர்.23/2024ல் தாக்கல் செய்யப்பட்டு சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 11 X 9437 Toyata Innova car முன்னீர்பள்ளம் காவல்நிலைய பொறுப்பில் உள்ளதால் அதன் உரிமையாளர் தனது உரிமையை நிலைநாட்டி மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் மனு செய்து பெற்றுக்கொள்ளுமாறும், சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று பயனற்றது என்பதால் அதனை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

17) எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை பத்திரங்கள் மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A ROBINSON GEORGE

Digitally signed by A ROBINSON GEORGE
Date: 2024.08.29 15:07:29 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

1. அ.சா. 1 – பெருமாள்துரை
2. அ.சா.2 – அருள்ராஜ்
3. அ.சா.3 – முத்துபாலா
4. அ.சா.4 – அந்தோணி
5. அ.சா.5 – சுரேஷ்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 26.09.2019 | புகார்மனுவில் உள்ள அ.சா.1ன் சாட்சிக் கையொப்பம் |
| 2 | அ.சா.ஆ.2 | 26.09.2019 | புகார் மனு |

| | | | |
|---|---|---|---|
| 3 | அ.சா.ஆ.3 | 26.09.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | 25.09.2019 | பார்வை மகஜர் |
| 5 | அ.சா.ஆ.5 | 26.09.2019 | மாதிரி வரைபடம் |
| 6 | அ.சா.ஆ.6 | 26.09.2019 | அத்தாட்சி |
| 7 | அ.சா.ஆ.7 | 26.09.2019 | படிவம்–91 |

எதிரி தரப்பு சாட்சிகள் : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

அரசு தரப்பு சான்றுப் பொருள் :

சா.பொ.1 TN 11 X 9437 Toyata Innova car

சா.பொ.2 அருவாள்

A ROBINSON GEORGE

Digitally signed by A ROBINSON GEORGE
Date: 2024.08.29 15:07:34 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி.